# 24-01-2025 செய்தி

## 5,300 ஆண்டுகள் தொன்மை: இரும்பின் காலத்தை அறிந்தது எப்படி?

- தமிழ்நாட்டில் மாங்காடு (சேலம்), கீழ்நமண்டி (திருவண்ணாமலை) மயிலாடும்பாறை (கிருஷ்ணகிரி), ஆதிச்சநல்லூர், சிவகளை (தூத்துக்குடி) ஆகிய இடங்களில் உள்ள இரும்புக்கால ஈமக்குழிகளில் இருந்து சான்றுகள் பெறப்பட்டன.

- இவை கதிரியக்கக் கரிம காலக் கணிப்புகள் மற்றும் தூண்டொளி காலக் கணிப்புகளுக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றின் முடிவுகள் தமிழ்நாட்டில் இதுவரை இரும்பின் தொன்மை குறித்தான கருத்தை மறுபரிசீலனை செய்யவைத்துள்ளன.

- இரும்புக் கால தொல்லியல் தலங்களுக்கு தென்னிந்தியா பெயர் பெற்றது. இதுவரை 3,000-க்கும் மேற்பட்ட இரும்புக் கால ஈமச் சின்னங்கள் தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் -1.362 முதுமக்கள் தாழிகள், 996 பரல் உயர் பதுக்கைகள், 225 கல் வட்டங்கள் மற்றும் 634 வாழ்விடத்துடன் கூடிய ஈமக்காடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

- சேலம் மேட்டூர் வட்டத்தில் உள்ள மாங்காடு என்ற இடத்தில் சிதைவுற்ற கல் பதுக்கையில் இருந்து இரும்பு வாளின் மாதிரி கண்டறியப்பட்டது.

- திருவண்ணாமலை மாவட்டம் கீழ்நமண்டியில் ஈமப்பேழையுடன் கூடிய முதல் ஈமக்குழியில் இருந்து இரும்பு மாதிரி கண்டறியப்பட்டது. இது காலக் கணிப்புக்கு உட்படுத்தப்பட்டது. இந்தக் கண்டுபிடிப்பு மாங்காட்டில் கிடைத்த இரும்பின் காலக் கணக்கீட்டை ஒரு நூற்றாண்டு முன்னோக்கி நகர்த்தியது

- கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறையில் அகழாய்வு குழிகளில் இருந்து இரும்புப் பொருள்கள் கிடைத்தன. இவை, கி.மு.2172- இல் தமிழ் நாட்டில் இரும்பு பயன்படுத்தப்பட்டதாக உறுதிப்படுத்தின.

- தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூர் ஈமத்தளத்தில் இரும்பினாலான வாள்கள், கத்திகள், ஈட்டிகள் அம்பு முனைகள் மூன்றுமுனை ஈட்டி முதலான பொருள்கள் கிடைத்துள்ளன. இந்தப் பொருள்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில், தமிழ்நாட்டில் இரும்புப்பயன்பாட்டின் காலத்தை கி.மு. 3,000 ஆண்டின் இடைப் பகுதிக்குக் கொண்டு சென்றது.

- தூத்துக்குடி மாவட்டத்தில் மற்றொரு தொல்லியல் தலமான சிவகளை, இரும்புக் கால வாழ்விடப் பகுதியாகவும் ஈமத் தளமாகவும் உள்ளது.

- அங்கு கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழியின் உள்ளேயும் வெளியேயும் கத்திகள், அம்பு முனைகள், மோதிரங்கல், உளிகள், கோடரிகள், வாள்கள் என 85-க்கும் மேற்பட்ட இரும்பினாலான பொருள்கள் சேகரிக்கப்பட்டன இவை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதில், இரும்பின் பயன் பாடு குறைந்தபட்சம் கி.மு.3,300-க்கு முன்பிருந்தே இருக்கலாம் என அறிய முடிவதாக நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.